Registered as a News Paper பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 29 (14 - 08 - 1991) புதன்கிழமை ஓசை: 177

## தோட்டத்துறைதெரிவில் தமிழர் புறக்கணிப்பு

(கொழும்பு)

அரசாங்கத் துறைகளில் விகிதாசாரப்படியே தொழில்வாய்ப்பு எனசிறிலங்கா ஜனாதிபதி கூறிய அதேவேளை தோட்டத்துறைமார்களுக்கான பயிற்சியாளர் தெரிவில் முஸ்லிம்களும் தமிழர்களும் முற்றுமுழுதாக புறக்கணிப்பிற்குள்ளாகி உள்ளனர் என கொழும்பு செய்திகள் கூறுகின்றன. இந்த பயிற்சியாளர் (4 ஆம் பக்கம் பார்க்க)

### மடு அகதி முகாமில்

# உணவு, மருந்து பெரும் தட்டுப்பாடு:

# தொற்றுநோய்கள் பரவும் அபாயம்

(வவுனியா)

மடு அகதிகள் முகாமில் உணவு, தண்ணீர் மற்றும் மருந்துப் பொருள்களுக்கும பெரும தட்டுப்பாடு நிலவுவதாகவும் தொற்று நோய்கள் பரவுவதற்கான அறிகுறிகள் தென்படுவதாகவும் புனர்வாழ்வு அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

**பல்லாயிரக் கணக்கான மக்களைக் கொண்ட மடுக்கோயில் அகதி முகாமிற்குத் தேவையான உணவு வகைகள், மருந்துப் பொருள்கள் மற்றும் அத்தியாவசிய தேவைகளை சீராக வழங்காததுதான் இந்நிலைஉருவாகக் காரணம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.**

அகதிகளின் வெளித்தேவைக்காக சேகரித்து வைத்திருந்த மழை நீரும் வறட்சி காரணமாக வற்றிவருகிறது. அகதிகளின் குடிநீர்த் தேவைக்கெனத் தோண்டப்பட்ட கிணறுகளிலும் தண்ணீர் பற்றாக் குறை நிலவுகிறது. இதனால் மடுமுகாமின் சுற்றுச் சூழலும் சுகாதார நிலையும் பாதிப்படைந்து வருகின்றது.

அதேவேளைஅகதிகள் மத்தியில் வயிற்றோட்ட நோயும், வேறு தொற்று நோய்களும் கண்டிருப்பதாக புனர்வாழ்வு அதிகாரிகள்தெரிவிக்கின்றனர்.

### சார்க் மாநாடு பாதுகாப்பிற்கு

## தமிழ் குழுக்களையும் பயன்படுத்த ஆலோசனை

அரசாங்க சார்புத் தமிழ் குழுக்கள் கொழும்பிலும், புறநகர்ப் பகுதிகளிலும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள் புலிகளின் திடீர்த் தாக்குதல்களை எதிர்பார்த்தே இந்த நடவடிக்கை என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ் குழுக்கள், பொலிஸ் படையுள், 12ஆவது இராணுவப் பிரிவும் கொழும்பில 'என்னை நம்புங்கள்' பாதுகாப்பு நடவடிக்கையில்ஈடுபட்டுள்ளது.

இதேவேளை நவம்பரில் நடைபெறவுள்ள சார்க் மாநாட்டிலும், அது தொடர்பான தடகள விளையாட்டுப்போட்டியிலும் மேலதிகமாகத் தமிழ் குழுக்கள் பாதுகாப்புப் பணியில் பயன்படுத்தப்படவுள்ளன

சார்க் மாநாட்டில் பங்குபற்றும், இந்தியத் தூதுக் குழுவும், விளையாட்டு வீரர்களும் தமது பாதுகாப்புக்கென சொந்தப் பாதுகாப்பு ஒழுங்குகளுடன் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

### அம்பாறையில் புலிகள் அதிரடி

## இரு பொலிஸார் பலி; ஆயுதங்கள் மீட்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் பொலிஸ் காவலரண் மற்றும் ரோந்து வந்த பொலிஸ் ஜீப் மீதும் ஒரே நேரத்தில் விடுதலைப் புலிகளால் மேற் கொள்ளப்பட்ட தாக்குதலில் இரு பொலிஸார் கொல்லப்பட்டதுடன் நால்வர் காயமடைந்தனர். சில ஆயுதங்களும் மீட்கப்பட்டன. புலிகள் தரப்பில் ஒருவர் வீரமரணமடைந்தார்.

நேற்று முன்தினம் இரவு (4ஆம் பக்கம் பார்க்க)

## நாரந்தனையிலிருந்து மூதாட்டி தப்பி வந்தார்

(யாழ்ப்பாணம்)

ஒரு பைக்கட் ''லக்ஸ்பிறே'' பால் மாவுடன் பதினைந்து நாட்கள் உயிர் வாழ்ந்த மூதாட்டி ஒருவர் சிறிலங்கா இராணுவத்தினரின் பிடியில் இருந்து மீண்டு வந்துள்ளார்.

நாரந்தனையைச் சேர்ந்த குழந்தை (வயது 84) என்ற மூதாட்டி இராணுவத்தினரிடமிருந்து அண்மையில் மீண்டு வந்துள்ளார். இவர் தான் இராணுவத்தினரின் பிடிக்குள் சிக்கியிருந்த காலப் பகுதியில் தனக்கு ஏற்பட்ட அனுபவங் (4 ஆம் பக்கம் பார்க்க)

## முடமாகிய இராணுவத்திற்கு விசேட கழிவறைகள்

(கொழும்பு)

ஆனையிறவு யுத்தத்தில்முடமாகிய சிறிலங்கா இராணுவத்தினருக்கு விசேடமான கழிவறைகளை அமைக்கும் திட்டம் ஒன்றை மகாபோதி சங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்கான உதவியை அது பொதுமக்களிடமிருந்து கோரியுள்ளது.

செயற்கை உறுப்புகளையும் சக்கர நாற்காலிகளையும் வழங்குவதுடன் புனர்வாழ்வு உதவி முடிந்து விடக்கூடாது என்று மகாபோதி சங்கத் தலைவர் காமினி ஜெயசூரியா தெரிவித்துள்ளார். முடமான (4 ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளால் விடுவிக்கப்பட்ட

# கப்டன் அஜித் உட்பட 3 அதிகாரிகள் பலி

(கொழும்பு)

வெலிகந்தையில் கடந்த 2ஆம் திகதி புலிகளின் தாக்குதல் ஒன்றில் 24 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுதெரிந்ததே. இதில் மூன்று கப்டன் தரத்தில் உள்ள அதிகாரிகளும் அடங்குவார்கள். இவர்களுள் 1986ஆம் ஆண்டு அடம்பனில் நிகழ்ந்த மோதலின்போது புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டு (4ஆம் பக்கம் பார்க்க)

# வளைகுடாப் போர் போன்றே ஆனையிறவு யுத்தகளம் இருந்தது

### - ஆனையிறவு பொறுப்பதிகாரி மேஜர் சரத் கருணரத்ன

(கொழும்பு)

''என்னை நம்புங்கள் இந்த போர் வளைகுடாப் போர் போலவே இருந்தது. தாக்குதல் ஆரம்பித்தபோது முப்பது வினாடிகளுக்கு ஒருமுறை என்ற வகையில் புலிகள் ''பசிலன்'' குண்டுகளால் தாக்கினர். இச்சமயம் வானம் ஒரே புகைமண்டலமாய் இருந்தது, பீரங்கிகளையும் ரொக்கட் வீச்சுக் கிரனைட்டுக்களையும் கொண்டு படையினர் பதில் தாக்குதல் நடத்தினர். எங்கும் ஒரே இருள்மயமாக இருந்ததால் இலக்குத் தவறியே தாக்குதல்கள் தொடுக்கப்பட்ட வண்ணம் இருந்தன'' என்று ஆனையிறவுப் போரின்போது அம்முகாமிற்குப் பொறுப்பாக இருந்த சரத் கருணாரத்ன ராய்டர் செய்தி ஸ்தாபனத்திற்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### 2வது லெப். விவேக், சீசர்

(யாழ்ப்பாணம்)

அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம்மேற்கொள்ளப்பட்ட பொலிஸ்காவலரண் மீதான தாக்குதலின் போது 2வது லெப். விவேக் (உதய (4ஆம் பக்கம் பார்க்க)

### ஐம்பது சதம் உயர்வு

பத்திரிகைத் தாள், மற்றும் அச்சக சாதனங்களின் தட்டுப்பாடு, விலையுயர்வு என்பவற்றின் காரணமாக மக்கள் தினசரியான ஈழநாதம் நாளை (15-08-91) முதல் தனது விலையை ஐம்பது சதத்தால் உயர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. வாசகர்கள், வர்த்தகர்கள், விளம்பரதாரர்கள் மற்றும் அபிமானிகள் அனைவரும் இவ்விலை உயர்வைக் கருதாமல் தொடர்ந்தும் ஆதரவளிப்பார்களென எதிர்பார்க்கிறோம்.

### பல படை காயம்

(கொழும்பு)

ஆனையிறவு இராணுவ முகாம் மீது நேற்றுமுன்தினம் இரவு புலிகள் நடத்திய தாக்குதலில் பல இராணுவத்தினர் காயமடைந்ததாக நேற்றுக் கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளது.

## வவுனியா நகர் வீடுகள் பொலிஸார் தேடுதல்

வவுனியா நகரப் பகுதியில் உள்ள வீடுகளில் பெற்றோலியப் பொருள்கள், பற்றரி வகைகள் வைத்திருப்போரை தேடும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது,


இரகசியமான முறையில் தென்பகுதியிலிருந்து இப்பொருள்களை கடத்திவரும் சில வியாபாரிகள், வடபகுதிக்கு இவற்றை அனுப்பி வைக்கின்றனர் என்ற சந்தேகத்தின் பேரிலேயே பொலிஸார் இத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது. (தி)

## மட்டு. வைத்திய சேவை ஸ்தம்பிக்கும் நிலையில்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வைத்திய சுகாதார வசதிகள் பெருமளவில் பாதிப்பிற்குள்ளாகியுள்ளது. மட்டக்களப்புபொதுவைத்தியசாலையில் அன்புலன்ஸ் வண்டிகளோ சத்திர சிகிச்சைக்கு அத்தியாவசிய தேவையான ஒட்சிசன் சிலிண்டர்களோ எக்ஸ் கதிர்ப் படம் பிடிக்கும் கருவியின் பிலிம்களோ எவையும் இல்லை என செய்திகள் தெரிவிக்கின்றன. ஒட்சிசன் தட்டுப்பாட்டினால் சத்திர சிகிச்சைகள் (4 ஆம் பக்கம் பார்க்க)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| வீரஜனனம் | வீரமரணம் |
| --- | --- |
| 15 - 03 - 1968 | 5 - 07 - 1991 |

### வீரவேங்கை யூசி
**(ஆறுமுகம்பிள்ளை ஸ்ரீசுந்தரம்)**

இந்தியப் படையின் நெருக்கலுக்கிலக்காகி
இடிஅடிபட்டுச் சிறையிருந்தாய் பலாலியில்
இந்தியப்படை வெளியேறியதும்
வந்து விட்டாயென்று அகமகிழ்ந்தோம்
நொந்தவுன் மனம் களிப்புறவே வருகிறேன் அம்மா
– என்றியம்பி
நேராகவே சென்றாய்! விடுதலைப்புலி வீரனானாய்!!
பந்தபாசம் மறந்தும் நீ பற்றிய செயல் கண்டு
பூரித்துப் போனேன் பெற்ற நெஞ்சுக்குப் பெருமை
தானே!
தமிழ் எங்கள் உயிர் தமிழீழம் எங்கள் தாயகம்
என்ற
தானைத் தலைவனின் மந்திரம் ஜெபித்து
தமிழீழ மண்மீட்பிற்காக ஆனையிறவு சென்றாய்
[illegible] அரும்புதல்வா
தக்கவிதம் போராடி உந்தனையே அர்ப்பணித்தாயே!
உடலெல்லாம் என் கண்ணீரால் நனைந்தாலும்
உள்ளமெலாம் உன் தியாகத்தீயால் சுடுகின்றதே!
சடசட என இடிமுழங்கி மழைபெய்யும் இவ்வேளை
முத்தான உன் முகத்தை மின்னலெனக் கண்டோம்
சிறி
தவறாது பறக்கும் புலிக்கொடி ஆனையிறவில்!

ஏ. ஜி. ஏ. லேன்,
நெடியகாடு,
வல்வெட்டித்துறை.

இங்ஙனம்
உன் நினைவால் வாடும்
குடும்பத்தினர்

(R–1623)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### வீரவேங்கை பழனி
**(அந்தோனிப்பிள்ளை - அருள்தாஸ்)**

| வீர ஜனனம் | வீர மரணம் |
| --- | --- |
| 17-12 1973 | 14-07-1991 |

கட்டைக் காட்டினிலே காடையர் கூட்டமதில்
புலியெனவே பாய்ந்தாயே
புவிமீது புகழுடனே புலியே நீ சாய்ந்தாயே!
மண்மீட்கப் போராடி விண்ணோடு சேர்ந்தவனே
வீறு நடை போட்ட உந்தன்
கால்கள் எங்கே சென்றதய்யா?
நீ நடந்த பாதை தன்னில்
நாம் தொடர்ந்து வந்திடுவோம்!
நாளை தமிழீழம் தன்னை
நாம் மீட்டுக் கொண்டிடுவோம்!

13-08-91 இல் அருள்தாஸின் ஆன்ம இளைப்பாற்றிற்கு இரங்கற் திருப்பலி பருத்தித்துறை கலட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப் பட்டது.

முனை,
பருத்தித்துறை.

பெற்றோர், சகோதரர்,
உறவினர்கள்.

(R/1638)


## முக்கிய அறிவித்தல்

மில்க்வைற் திரவ
சவர்க்காரம்,
வேப்பெண்ணெய் நிரப்பிய
போத்தலையும், அடைத்த
மூடியையும் இணைத்து
ஒட்டப்பட்ட தாளில்
''மில்க்வைற்''
சின்னம் உள்ளதா
என்பதைக்
கவனித்து வாங்குங்கள்.
**விலை: $\frac{1}{2}$ போத்தல்**
**ரூபா 50/-**
மில்க்வைற், யாழ்ப்பாணம்.
(B/2946)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1991-09-20 ஆம் தேதி வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

கணிதமும் புள்ளிவிவரவியலும் / விலங்கியல் - சிரேட்ட விரிவுரையாளர் தரம் I/சிரேட்ட விரிவுரையாளர் தரம் II/ உதவி விரிவுரையாளர்

**சம்பள அளவுத் திட்டம்**

1. சிரேட்ட விரிவுரையாளர் தரம் 1 - ரூபா: 9,600 - 8x250 - 11, 600/- மாதமொன்றுக்கு
2. சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11 - ரூபா: 8.000-5x250-9,250/- மாதமொன்றுக்கு
3. உதவி விரிவுரையாளர் - ரூபா 3,900/- (நிலையானது) மாதமொன்றுக்கு

யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத் தாபனக் கிளையின் சிரேட்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களைத் தபாலில் பெற விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு ரூபா 1.50 முத்திரையொட்டப்பட்ட 23x10 ச.மீ அளவுடைய கடித உறை அனுப்பப்படல் வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

**பதிவாளர்.**
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1991-08-09.

(B/ 2949)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



| வீரஜனனம் | வீரமரணம் |
| --- | --- |
| 25 - 04 - 1973 | 23 - 07 - 1991 |

### வீரவேங்கை காசி
**(மாயாண்டி ஞானராஜ்)**

'' எம்மண்ணின் துயர் நீங்க
எழுந்து நீ சென்றுமே
எம் மனத்தில் உயர்ந்து நீ
எதிரிப்படை கலங்க வைத்தாய்!
தாங்கொணாத் துயர் சுமந்து
தமிழ் மண் தவிக்கையிலே
நீ பதித்த தடமது -- இடர்
நீக்கி நின்ற வேளையிலே
களத்திலே உன் முடிவை
கண்டு மனம் தவித்ததையா!
நாட்டுப்புறம் ஆனாலும்
நாட்டுப்பற்றுக் கொண்டு
பாலைப்பாணி மண்ணதனில்
முதல் மாவீரனாகி விட்டாய்!
நிற்காது உன் பணி
நிச்சயம் தொடரும் இனி!

பாலைப்பாணி,
பாண்டியன் குளம் பிரதேசம்.

பெற்றோர், மைத்துனர்,
சகோதரர்கள்,
பிரதேசமக்கள்,

(R/1598)

## நினைவு கூருகின்றோம்...

### 1991 - 08 - 14

1985 ஆம் ஆண்டு இதேதினத்தில் தங்காலையில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 6 தமிழ் இளைஞர்கள்

1988ஆம் ஆண்டு களுதாவளையில் தேசவிரோதிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரமரணமெய்திய
**வினோபா** (க. ஜெகதீஸ்வரன் - களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு)
**குருசாமி** (இரத்தினசிங்கம் – களுதாவளை)

1989 ஆம் ஆண்டு வீரமரணமெய்திய
**கண்ணன்** (மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, 38 ஆம் கிராமத்தில் தேசவிரோதிகளுடனான மோதலில் வீரமரணமெய்திய
**நந்தன்** (சின்னத்தம்பி நந்தகுமார் - 38 ஆம் கிராமம், மட்டக்களப்பு)

திகிலிவெட்டையில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது ஏற்பட்ட மோதலில் வீரமரணமெய்திய
**கமல்** (தர்மலிங்கம் சோமலிங்கம் - சந்திவெளி)

மேன்காமத்தில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
**சுட்டா** (ப. சிறிஸ்கந்தராஜா - கங்குவேலி, திருக்கோணமலை)

பருத்தித்துறை, வியாபாரிமூலைப் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இன்பருட்டியைச் சேர்ந்த நடன ஆசிரியர்

யாக்கரையில் இந்தியப் படையினரின் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பெண்

1990 ஆம் ஆண்டு அம்பாறை, தாந்தாமலைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது ஏற்பட்ட மோதலில் வீரமரணமெய்திய
**செல்வா** (வேல்முருகு - களுமுந்தான்வெளி)
**அன்றூ** (அக்கரைப்பற்று)
**துசியந்தன்** (கரவெட்டி)

மட்டக்களப்பு, போராவெளி, ஈச்சந்தீவுப் பகுதிகளில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட 15 தமிழர்கள்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**- விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(B/2948)

### சிந்தனைக்கு

உன் சொல்லுக்கு ஒப்பச் செயலையும்
செயலுக்கு ஒப்பச் சொல்லையும் இணங்கச் செய்

—வில்லியம் ஷேக்ஸ்பியர்


# ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 14-08-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 5208
த. பெ. எண் 05


## "நம் நாட்டு மக்கள்" வேடிக்கையான பேச்சு

வடபகுதிக்கென சிறிலங்கா அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட பொருள்களில் வெடிப் பொருள்கள் உட்பட மருந்துப் பொருள்கள், உணவுப் பொருள்கள், அத்தியாவசியப் பொருள்கள், மின்சாரப்பொருள்கள், அச்சுப் பொருள்கள்என்பன அடங்குகின்றன.

வெடிப் பொருள்களை சிறிலங்கா அரசாங்கம் தடை செய்தது அதன் நோக்கில் சரியானதாகும். ஆனால், அப் பொருள்கள் வடபகுதிக்கு சிறிலங்காவினால் எப்பொழுது கொண்டு வரப்பட்டது அல்லது எப்பொழுது அனுப்பி வைக்கப்பட்டது? அதேவேளை அவற்றை சிறிலங்காவிலாவது கொண்டு நடமாட அனுமதியுண்டா? இந்தநிலையில் துப்பாக்கிகள், வெடிப்பொருள்கள்என்பன தடை செய்யப்பட்ட பொருள்களின் பட்டியலில் இடம் பெறுவது ஒரு விநோதமானதாகும்.

அதேவேளை சர்வதேசரீதியாக ஒரு நாட்டின் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் போதும் உணவுப் பொருள்களுக்கும், மருந்துப் பொருள்களுக்கும் தடைகள் விதிக்கப்படுவதில்லை. மனிதநேய அடிப்படையில் இந்தப் பொருள்கள் அனுமதிக்கப்படுகின்றன.

ஆனால் சிறிலங்கா அரசாங்கம் வடபகுதிக்கான மருந்துப் பொருள்களின் தடையை விதித்திருப்பது சிறிலங்கா அரசாங்கத்தின் இனவாதப் பேதங்களையும் மனிதநேயமற்ற தன்மையையும் வெளிக்காட்டப் போதுமானதாகும்.

யுத்தச் சூழல் நிலவும் ஒரு பகுதியில் மக்களுக்கு அவசியமாகத் தேவைப்படுவது உணவும், மருந்துமேயாகும் நிவாரண உணவுப் பொருள்களின் தடை மூலம் பட்டினிச்சாவின் விளிம்பிற்கு மக்களை இழுத்துச் சென்றுள்ள சிறிலங்கா அரசாங்கம் மருந்துப் பொருள் கட்டுப்பாட்டால் மக்களை ஈவிரக்கமற்று அழித்தொழிக்கப் பார்க்கின்றது,

தனியாக யுத்தமுனையில் உள்ளவர்கள் மட்டுமே போரினால் காயமடையவில்லை. அது சிலவேளை வேறு ஏதாவது ஒரு நாட்டில் நடைபெறலாம். ஆனால் இலங்கையில் யுத்த முனைக்கு அப்பால் உள்ளவர்களும் சிறிலங்கா இராணுவத்தினரின் அடாவடித்தனத்தால் படுகாயம் அடைகின்றனர்.

மேலும் மக்கள் தனியாகப் போரினால் மட்டும் காயமடையவில்லை விபத்துக்கள் உட்பட பல்வேறுவகையில் காயமடைகின்றனர். நோய்வாய்ப்படுகின்றனர். வருடக்கணக்காகநீடிக்கும்போரினாலும் நீடிக்கும் பொருளாதாரத் தடையின் விளைவுகளினாலும் அவதியுறும் மக்கள் உணவுக் குறைபாடு, போஷாக்கின்மை என்பனவற்றாலும் நோய்வாய்ப்படுகின்றனர்.

கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக நடந்து கொண்டிருக்கும் போரினால் வடக்கில் பெரும் மருந்துப் பற்றாக்குறை நிலவுகின்றது. கிராமப்புற வைத்தியசாலைகளில் மருந்துகள் இல்லை. யாழ் மாவட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட மருந்துகளே முழுமையாகக்கிடைப்பதில்லை.

இந்த நிலையில், மருந்துப் பொருள்களுக்குக் கட்டுப்பாடு விதித்தல் என்பது தனியாக சிறிலங்கா அரசாங்கம் கூறுவது போல் போராளிகளை மட்டும் பாதிக்கும் விடயமல்ல. இது போராளிகளை மட்டுமே பாதிக்கும் விவகாரமாக இருக்குமாயின் போராட்ட காலத்திற்கு முன் யாழ். போதனா வைத்தியசாலை போன்றதொரு வைத்தியசாலை அமைத்திருக்க வேண்டிய அவசியம் வந்திருக்காது. இது சிறிலங்கா அரசாங்கத்திற்குத் தெரியாததல்ல இது திட்டமிட்டு தமிழரை அழிப்பதற்கான ஒரு மாற்று வழிமுறையாகும்.

இதேபோன்றதே அத்தியாவசிய பொருள்களான சவர்க்காரம், இனிப்பு வகைகள், சோயா உணவுவகைகள் என்பனவற்றின் மீதும் விதிக்கப்பட்ட தடைகளாகும். மக்களை உணவு நெருக்கடியினுள்ளும் சுகாதாரச் சீர்கேட்டினுள்ளும் தள்ளும் நடவடிக்கைகளுமாகும்,

மேலும் காகிதம் உட்பட அச்சுப் பொருள்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகள் தமிழ் மக்களின் கருத்துச் சுதந்திரத்தை முழுமையாக மறுக்கும் ஒரு நடவடிக்கையாக இருப்பதோடு மக்கள் உண்மை நிலையை அறிவதைத் தடை செய்யும் ஒரு தீவிர நடவடிக்கையுமாகும். ஜனநாயகநாடு என்ற போர்வையில், செயற்படும் சிறிலங்கா அரசாங்கம் இத்தடையின் மூலம் ஜனநாயகத்தின் அடிப்படை அம்சங்களுக்கே தடைவிதித்துள்ளது.

இந்த நிலையில் இப்பொருள்களுக்கான தடை தனியாக தமிழ் மக்களின் பொருளாதார நடவடிக்கையையும், போக்குவரத்தையும் மட்டும் தடைசெய்யவில்லை. இது தமிழரை படிப்படியாக அழித்துவிடுவதற்குமான திட்டமிட்ட நடவடிக்கையாகும். அந்நிய நாடு ஒன்றின் மீது கூட உலகநாடுகள் மேற்கொள்ளாத இந்தத் தடைகளை மேற்கொள்ளும் சிங்கள அரசாங்கம் தமிழரையும் தமது நாட்டு மக்கள் எனக் கூறுவது வேடிக்கையாக உள்ளது.

# சங்கிலியன் காலத்தில் இழந்ததை பிரபாகரன் காலத்தில் மீட்டெடுப்போம்

**- புதுவை இரத்தினதுரை**

சங்கிலியன் காலத்தில் 1591 ஆம் ஆண்டு ஐப்பசி 26 ஆம் திகதி தமிழீழத்தின் இறைமையை இழந்தோம். அன்று இழந்ததை இன்று எமது தலைவர் பிரபாகரன் காலத்தில் திரும்ப மீட்டெடுப்பதற்காக போராடுகின்றோம் இந்த வரலாற்றுப் போரில் ஆனையிறவில் ஆரம்பிக்கப்பட்ட யுத்தம் உலகத்தை உற்றுப்பார்க்க வைத்தபெரும் போராகும் நேற்று முன்தினம் மாலை 8.00 மணிக்கு வடமராட்சி கலிகைச் சந்தியில் நடந்த போர்க்கால கூட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டு பிரிவு பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.

மேலும் அவர் விடுதலைப் புலிகள் உயிரை இழப்பார்கள் உடலின் அவயங்களை இழப்பார்கள், ஆனால் மானத்தை இழக்க மாட்டார்கள் என்ற செய்தியை எதிரிக்கும் உலகத்திற்கும் உணர்த்திய போர், ஆனையிறவுபோர். எதிரி 800 படையினரை மீட்பதற்காகவும், 56 காயமடைந்த இராணுவத்தினரை காப்பாற்றவும் தான்வந்தான். அவர்களை மீட்டபோது தன் 800 க்கும்மேற்பட்டபடையை இழந்தான். 1000 ற்கும் மேற்பட்ட படையினரை அங்கவீனர் ஆக்கினான், அதன் பிறகே அவனால் முகாமிற்குள் நுழைய முந்தது. இது தமிழனின் வீரத்திற்கு ஒரு சான்று. எங்கள் எல்லைக்குள் எதிரி இனி சுலபமாக நுழைய முடியாது, சுதந்திரமாக உலா வரமுடியாது என்பதை இந்த போர் மூலம் வேங்கைகள் விளங்க வைத்தனர் இதுவரை எழுதப்பட்ட தமிழனின் வீர வரலாறு கதையாகவும் கற்பனையாகவும் இருக்கலாம் ஆனால் விடுதலைப்புலிகள் எழுதும் சரித்திரம் கண்ணுக்கு எதிராக நடக்கும் உண்மை நிகழ்வாகும். 8000 இராணுவத்தினர் 15 விமானங்கள் 20ற்கும் மேற்பட்ட பீரங்கிப் படகுகள், கனரகவாகனங்கள் இத்தனை பலமுடனும் தரையிறங்கிய படையினரை எதிர்கொண்ட வேங்கைகளின் எண்ணிக்கை என்ன? மிகக் குறைவு. கையில் ஏந்திய போர்கருவிகள் என்ன? மிகக் குறைவான இரும்பு துப்பாக்கிகள்.

இலங்கையில் இரண்டு இராணுவம் இருக்கிறது. ஒரு இராணுவத்திற்கு நாடு இருக்கிறது. ஒரு இராணுவத்திற்கு நாடு இல்லை என்று கொழும்புப் பத்திரிகைகள் எழுதும் அளவிற்கு மரபு வழிப் படையாகி போரில் ஈடுபட்டுள்ளோம்.

வீரர்களை முன்னேறவிட்டு தளபதிகள் பின்னே நின்று போரிடும் படை மரபையே மீறி, தளபதிகள் முன்னேயும் வீரர்கள் பின்னேயும் நின்று வீரம் விளைவிக்கும் மரபை விடுதலைப் புலிகள் வரித்துள்ளனர். இதனாலேதான் தளபதிகளின் புகழுடல்கள் கூட அஞ்சலிக்கு வைக்கப்படுவதில்லை. இந்த வரலாறு எங்கேயும் உண்டா? இந்த வீரம் இதுவரை எங்கேயும் விளைந்ததுண்டா?

அன்பார்ந்த தமிழீழ மக்களே! வீட்டுக்கொருவர் வாருங்கள். வெற்றியை மிக விரைவில் சுமப்போம். தமிழீழ வரலாற்றில் உங்கள் பெயர்கள் எழுதப்படவேண்டும். இன்று நடப்பது ஆனையிறவுக்கான போர் அல்ல தமிழனின் மான உணர்வுக்கான போர். தலைவர் பிரபாகரன் காலத்தில் தமிழீழத்தை மட்டும் பெறுவது போதாது. அவரது காலத்திலேயே உலகிற்கு வழிகாட்டக் கூடியதாக தமிழீழத்தை நிர்மாணிக்கவும் வேண்டும் என்று கூறினார்.

இக் கூட்டத்தில், தினேஷ், ஆர்த்தி, கீர்த்தனா, ஆகியோரும் கருத்துரை வழங்கினார்கள்.

### பங்காரப்பாவை மாற்ற

## காங்கிரஸ் எம். எல். ஏக்கள் 37 பேர் கோரிக்கை

(டில்லி)

கர்நாடக முதலமைச்சர் எஸ். பங்காரப்பாவுக்குப் பதிலாக வேறொருவர் நியமிக்கப்படவேண்டும் என்று ஆளும் இந்திரா காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் 37 பேர் கோரியிருக்கிறார்கள்.

அனைத்து இந்திய இந்திரா காங்கிரஸ் தலைவர் நரசிம்மராவை அவர்கள் கடந்த திங்களன்றுபுதுடில்லியில் சந்தித்தார்கள். சந்திப்பின்போது இதற்கான மகஜர் ஒன்றை அவரிடம் கையளித்தார்கள்.

கர்நாடக இந்திரா காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் உச் மாஸ்ரி கெளடா தலைமையில் அவர்கள் பிரதம மந்திரியைச் சந்தித்தார்கள். அவர்களில் 32 எம். எல். ஏக்களும் 5 எம். எல். சிக்களும் இருந்தனர்.

கர்நாடக மாநிலத்தில் பங்காரப்பாவின் குறைநிறைகளைப் பற்றி அவர்கள் கட்சித் தலைவருக்கு விபரங்களை எடுத்துக் கூறினார்கள்.

மற்றும் தேர்தலின் போது தரப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றி வைப்பது தொடர்பாகக் கட்சியின் மதிப்பையும் தோற்றத்தையும் காப்பது பற்றிக் கட்சித் தலைவர் நரசிம்மராவின் ஆலோசனையை அவர்கள் நாடியதாகவும் நம்பப்படுகின்றது.

மாநிலங்களில் உள்ள நிலைமைகளை எடுத்துக் கூறுவதற்காக அர்சுன்சிங் உட்பட கட்சியின் மூத்த தலைவர்களை அதிருப்தி அடைந்த சட்டமன்ற உறுப்பினர்கள் சந்திப்பார்கள் என்று நம்பப்படுகின்றது.

## போட்டியின்றி தெரிவு

புலோலி ப. நோ. கூ. சங்கத்தின் கிளைக்குழு உறுப்பினர் தெரிவுகளுக்கான நியமனப்பத்திரங்கள் தாக்கலின் போது பதினொரு கிளைகளுக்கான கிளைக்குழு உறுப்பினர்கள் போட்டியின்றி தெரிவாகியுள்ளனர்.

வராத்துப்பளை, வியாபாரிமூலை கிளைகளுக்கான கிளைக்குழு உறுப்பினர்கள் தெரிவுக்குப் போட்டிகள் நிலவுவதனால் இதற்கான தேர்தல்கள் எதிர்வரும் சனிக்கிழமை 17ஆம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

### பாகிஸ்தானில்

## தேசிய அரசாங்கம் அமைக்க எதிர்க்கட்சிகள் கோரிக்கை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் நவாப் ஷெரீப் அரசாங்கத்திற்கு பதிலாக தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும் என்று இருபத்திரண்டு எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

எதிர்க்கட்சிகளின் மாநாடு ஒன்றில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. தேசிய அரசாங்கம் அமைக்கப்படாது விட்டால் தேசிய, மாகாண பேரவைகளைச் சேர்ந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ராஜினாமாச் செய்வார்கள் என்றும் முடிவு எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அரசாங்கத்தாரும் எதிர்க்கட்சியினரும் தத்தமது கருத்துக்களுக்கு ஆதரவாக இன்று புதன்கிழமை பொது மக்கள் பேரணியொன்றினை நடத்தவுள்ளனர்.

## வர்மா ஆணைக்குழு பகிரங்க விசாரணை

(டில்லி)

முன்னாள் பிரதம மந்திரி ராஜீவ் காந்தி பற்றி விசாரணை நடத்தும் வர்மா ஆணைக்குழு அதன் விசாரணைகளைப் பகிரங்கமாக நடத்தப் போகிறது.

இரகசிய இயல்புடையதாக இந்தஆணைக்குழுகருதும்சான்றுகள் தொடர்பாக மட்டுமே விசாரணை இரகசியமாக நடத்தப்படும் என்று புதுடில்லியில் வெளியிடப்பட்ட பத்திரிகைச் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

சாட்சியங்கள் பெரும்பாலும் சத்தியக்கடதாசி வடிவிலேயே ஏற்றுக் கொள்ளப்படும். தேவை ஏற்படின் சாட்சியங்கள் வாய்மொழி மூலமாகப் பதிவு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## சைக்கிள் திருட்டு

மல்லாகம் சந்தியிலுள்ள தேநீர்ச்சாலைக்கு முன்பாக நின்ற சயிக்கிளொன்றை கடந்தசனிக்கிழமை மாலை 5-30 மணியளவில் ஒருவர் திருடிச்சென்றார்.

இத் திருடனை சில நபர்கள் சயிக்கிள் உரிமையாளருடன் கூடி துரத்திப் பிடித்து விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தனர். (83)

## காணியை அபகரிக்க முயற்சி

காலி ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயிலுக்குச் சொந்தமான காணியை அபகரிக்கச் சிலர் முயற்சி செய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி மேற்படி கோயிலின் பரிபாலன சபையின் உறுப்பினர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

## அஞ்சலிக் கூட்டம்

நெல்லை க. பேரன் (பேரம்பலம்) மறைவையொட்டி யாழ் ஸ்ரான்லி வீதியிலுள்ள அஞ்சல் நிருவாக அலுவலகத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அஞ்சலிக் கூட்டமொன்று நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தை அஞ்சல் திணைக்கள யாழ். பிரதேச நிருவாக அலுவலகம் ஒழுங்கு செய்துள்ளது.

# இல.தமிழரை திருப்பி அனுப்ப தமிழக காவல்துறை பரிந்துரை

(திருச்சி)

இலங்கைத் தமிழ் அகதிகளிலிருந்து போராளிகளைப் பிரித்து இனங்காண முடியவில்லை என்பதால் அவர்களை தமிழகத்திலிருந்து இலங்கைக்குத் திருப்பி அனுப்ப வேண்டுமென தமிழக காவல்துறை தமிழக அரசிற்கு பரிந்துரைத்துள்ளதாக தமிழக சட்டம் ஒழுங்கு அமுல் பிரிவின் தலைமைக் காவல் ஆய்வாளர் தேவாரம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் திருச்சியில் செய்தியாளர் மத்தியில் பேசிய தேவாரம் தமிழகத்தில் போராளிகளின் நடமாட்டத்தை முழுமையாகக் கட்டுப்படுத்த வேண்டுமென்றால் அனைத்து இலங்கைத் தமிழ் அகதிகளையும் தமிழகத்திலிருந்து வெளியேற்ற வேண்டும் எனத் தெரிவித்தார்.

இலங்கைப்போராளிகளுக்கு வீடுகளை வாடகைக்கு விடுவோர் மீதும், உதவியளிப்போர் மீதும் தேசிய பாதுகாப்புச் சபைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்:

போராளிகளுக்கு உறுதுணையாக இருக்கும் தமிழ் நாட்டவர்களை களைந்தெடுப்பது என்று தமிழக அரசு உறுதி பூண்டுள்ளது என்றும்:

தமிழகத்தில் 15 இலங்கைத் தமிழர்கள் உட்பட அறுபது பேர் இச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தேவாரம் தெரிவித்தார்.

மேலும் தமிழககாவல்துறையின்கடலோர காவல் படைப் பிரிவு, மாநிலத்தின் பதினொரு கடலோர மாகாணத்தில் ஏற்படுத்த வேண்டுமென்று தாம் மாநில அரசாங்கத்திடம் பரிந்துரைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். தமிழகஅரசின்கோரிக்கையை அடுத்து தேசிய பாதுகாப்புப் படை அமைக்கப்பட்டுள்ளது என்றும், தமிழக சிறப்பு காவல்படையால் இப்படையின் 1800 பேர்களுக்கு வெடிகுண்டுகளை கண்டு பிடிப்பதிலும் அவற்றை அழிப்பதிலும் நவீன ஆயுதங்களை பாவித்தலிலும் ஒருமாத கால பயிற்சி அளிக்கப்படவுள்ளது என்று தேவாரம் தெரிவித்தார்.

இந்தப் பயிற்சி முடிந்தவுடன் இவர்கள் அதிரடிப் படைப்பிரிவினராக செயற்படுவார்கள் என்றும், இவர்களுக்கு நவீன தானியங்கி துப்பாக்கிகள் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் கடற்படை, கடலோர காவல்படை, மாநில காவல்படை ஆகியவற்றின் ரோந்துப் படகுகளுக்கு இடையேயும் மாநிலத்தின் 38 கடலோர சாவடிகளுக்கிடையேயும் தகவல் தொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும்,

நாகைப்பட்டினம், கோடிக்கரை, ஆர்க்காடுதுறை, மல்லிப்பட்டினம், ஜகதாப்பட்டினம், தொண்டி மற்றும் ராமேஸ்வரம் ஆகிய இடங்களில் அதிவேக விசைப் படகுகளுடன் கடற்படை மையங்கள் செயற்பட்டு வருவதாகவும், இவை ஒவ்வொன்றிலும் 125 கடற்படை வீரர்கள் உள்ளனர் என்றும் தெரிவித்தார்.

## படகில் வந்தவர்களில் மேலும் இருவர் கைது

(சென்னை)

இலங்கையிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை படகில் வந்து இராமேஸ்வரத்தை அடுத்துள்ள கடலோரக் கிராமமொன்றில் தலைமறைவாகிய குழுவைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்படும் மேலும் இரண்டுபேர் கைதாகியுள்ளார்கள்.

இவ்வாறு வந்த ஐந்து பேர்களில் இதுவரை மூன்றுபேர் கைதாகியுள்ளதாக மதுரைப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன,

இந்தக் குழுவில் இரண்டு பேர் இலங்கைத் தமிழர்கள். சிவகாசி அகதி முகாமில் இருந்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட இலங்கைத் தமிழர் யூடே என்ற சேவியர் குழு என்று கண்டறியப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். இவர் இலங்கைத் தமிழர் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்கள் மற்றும் இருவரும் தமிழ் நாட்டில் காரையூர் மணல் மேட்டைச் சேர்ந்தவர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது

இவர்கள் இருவரும் மருந்து, துணிவகைகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களை புலிகளுக்கு விநியோகம் செய்து வந்ததாகப் பொலிஸ் தரப்பில் சொல்லப்படுகிறது.

**நாரந்தனை**

கள் பற்றி கூறுகையில் குடிப்பதற்கு நீர் கூட இல்லாமல் மூன்று தினங்கள் இருந்ததாகவும் பின்னர் தமது உறவினர் ஒருவரின் வீட்டை திறந்து பார்த்த போது ஒருலக்ஸ்பிறே பால்மா இருந்ததைக் கண்டு அதை எடுத்து சுமார் பதினைந்து நாட்கள் சிறிது சிறிதாக உட் கொண்டதாகவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தான் ஒரு சமயம் சின்னமடு ஆலயத்தினுள் சென்று பார்த்த போது சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞன் ஒருவனின் சடலம் இரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருப்பதைக் கண்டதாகவும் தெரிவித்தார். மேலும் தனது இரு நெருங்கிய உறவினர்கள் மாடு கட்டுவதற்கு என்று வீட்டை விட்டு வெளிப்புறம் சென்றவர்கள் திரும்பி வரவேயில்லை. இவர்களுக்கு என்ன நடந்தது என்று இதுவரை தெரியவில்லை என்றும் அந்த மூதாட்டி தெரிவித்தார். (க)

**இரு பொலிஸார்**

9.30 மணியளவில் சென்றல் காம்புக்கும், 8ஆம் கொலனிக்குமிடையில் பிரதான வீதியில் அமைந்துள்ள பொலிஸ்காவல் அரண் ஒன்றின் மீதும் அப்பகுதியில் ரோந்து வந்து கொண்டிருந்த பொலிஸ் ஜீப் ஒன்றின் மீதும் ஒரே நேரத்தில் விடுதலைப்புலிகள் தாக்குதலை மேற் கொண்டனர். ஒரு சில நிமிடத் தாக்குதலில் இரண்டு பொலிஸார் கொல்லப்பட்டனர். இவர்கள் ரோந்து வந்த ஜீப் முற்றாக சேதமாக்கப்பட்டது. ஏனைய பொலிஸார் பின்வாங்கி முகாமிற்குள் ஓடிவிட்டனர். இத்தாக்குதலில் T56 ரகதுப்பாக்கி- 1, இதன் மகசின் - 1, 84 எஸ் ரக துப்பாக்கிகள் - 3, இதன் மகசின் 6, ஐ. எம். ரவைகள் - 25, 5.56 ரவைகள் 160 ஆகியன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

**கப்டன்**

நல்லூர் பின் வீதியில் மக்களின் பார்வைக்கு நிறுத்தப்பட்ட அஜித் சந்திர சிறியும் அடங்குவார்.

கப்டன் சாந்த எதிரிசிங்க, கப்டன் வீரசிறிசில்வா ஆகியோர் கொல்லப்பட்ட மற்றைய அதிகாரிகளாகும்.

## 'மக்கள் மயம்'

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சகல டிப்போக்களும் இந்தமாத இறுதிக்குள் மக்கள் மயப்படுத்தப்பட்டு விடும் என சிறிலங்காவின் போக்குவரத்து அமைச்சர் விஜயபால மெண்டிஸ் அறிவித்துள்ளார்.

இத்தகைய நடவடிக்கைகளால் இதுவரை வழங்கப்பட்டுவந்த சலுகைக் கட்டண பருவகாலச்சீட்டுகளில் எதுவித மாற்றமும் இருக்காது என்றும் அவர் தெரிவித்தார்.

## அதிபர்களின் அவசரக்கூட்டம்

பாடசாலைகளின் உடனடித் தேவைகள் பற்றியும், அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடுவதற்காக பண்டத்தரிப்பு, தென்மராட்சி, வடமராட்சி கல்விக்கோட்டத்தின் பாடசாலை அதிபர்களையும், கொத்தணி அதிபர்களையும் இன்று புதன் கிழமை பி. பகல் 2-00 மணிக்கு பண்டத்தரிப்பு கல்விக்கோட்ட அலுவலகத்திற்கும், நாளை வியாழக் கிழமை மு ப. 10.00 மணிக்கு சாவகச்சேரி றிபேக் கல்லூரிக்கும். நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மு ப. 10.00 மணிக்கு பருத்தித்துறை வட இந்து கல்லூரி மண்டபத்திற்கும் சகலரும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்

**மட்டு.**

யாவும் நிறுத்தப்பட்டும் உள்ளது.

மட்டக்களப்பு வைத்திய சாலையில் சேவையில் இருக்கும் மூன்று அம்புலன்ஸ்களும் உட்பட ஏறாவூர் வைத்திய சாலையின் ஒரு அம்புலன்ஸ் வண்டியும்பழுதடைந்துபோய் விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை காத்தான்குடி புதிய வைத்தியசாலையில் உள்ள ஒரேயொருஅம்புலன்ஸ் மட்டும் சேவையில் இருப்பதாகவும் செய்திகள்கூறுகின்றன. மட்டக்களப்பு வைத்திய சாலையில் முப்பத்திரெண்டு வைத்தியர்கள் இருக்க வேண்டிய இடத்தில் பத்து வைத்தியர்கள் மட்டும் சேவையாற்றி வருகின்றனர்.

**வீரவணக்கம்**

குமார், 3-ம் குறிச்சி உதயபுரம், மட்டக்களப்பு) வீரமரணமடைந்தார். நேற்றுக் காலை கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் சீசர் (தர்மதாஸ் - அன்ரன் ஜெகதாஸ் - வெளிச்ச வீட்டுவீதி, பருத்தித்துறை) வீரமரணமடைந்தார். இவர்கள் இருவருக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

**தோட்டத்துரை**

தெரிவுக்கென விண்ணப்பித்த முஸ்லிம்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட போதிலும் ஒருவர் கூட அதில் தெரிவு செய்யப்படவில்லை. ஆனால் தெரிவு செய்யப்பட்ட தமிழர்களில் ஒருவரேனும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவில்லை எனவும் அச் செய்திகள் கூறுகின்றன.

## அமெ. பிக்குகள் கொலை; தாய்லாந்தில் பதற்றம்

(மணிலா)

அமெரிக்காவிலுள்ள புத்த மத நிலையம் ஒன்றின் மீது நடந்த தாக்குதலில் பிக்குகள் கொல்லப்பட்டமை குறித்து தாய்லாந்தில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. புத்தமக்கள் அதிகமாக வாழும் தாய்லாந்தில் புத்தபிக்குகளின் படுகொலை அதிக கவனத்தைக் கவர்ந்துள்ளது. அதையடுத்து இப்படுகொலை குறித்து அமெரிக்க அரசு விசாரணை நடத்த வேண்டுமென தாய்லாந்து அரசு அமெரிக்காவைக் கேட்டுக் கொண்டுள்ளது. அத்துடன் புத்த மதத்தின்மீதுவெறுப்படைந்த சக்தி வாய்ந்த ஒரு குழுவினர் தான் இப்படுகொலையைச் செய்திருக்க முடியும் என்று தாய்லாந்தின் புத்த துறவி ஒருவர் கூறியுள்ளார்.

## புலிகளுக்குப் பாடம் புகட்டவேண்டும்

**-சுப்பிரமணியம் சுவாமி**

(சென்னை)

ராஜீவ்காந்தியைக் கொன்றதற்காக இதற்கு இணையான பாடமொன்றினைப் புலிகள் இயக்கத்திற்கு புகட்ட வேண்டும் என்று முன்னாள் மத்திய அமைச்சர் சுப்பிரமணியம் சுவாமி கூறியுள்ளார். இவர் மேலும் ஆரம்பம் முதலே தான் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கொள்கைகளுக்கு எதிரி என்றும், முன்னாள் ஓய்வு பெற்ற உயர் நீதி மன்ற நீதியரசர்கள், முன்னாள் வெளியுறவுச் செயலாளர்கள், மற்றும் பத்திரிகையாளர்கள் எனச் சிலர் சொகுசான வெளிநாட்டுப் பயணங்களுக்காக விடுதலைப் புலிகளை ஆதரித்ததுடன் அவர்களது சர்வதேச பிரசார மேடைகளிலும் பங்கு பற்றினர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ராஜீவ் கொலையுடன் பி. சி. சி. வங்கி தொடர்பு

(டில்லி)

ராஜீவ் காந்தி கொலையில் இந்தியாவிலுள்ள பி.சி.சி வங்கியும்சம்பந்தப்பட்டிருப்பதாக இந்தியமக்களவையில் ஜனதாதள் உறுப்பின ரவிராய் கூறியுள்ளார். இது சம்பந்தமாக வெளிவந்த பத்திரிகைச் செய்திகளை மேற்கோள் காட்டி பேசிய அவர் பி சி.சி. யின் இந்தியர்களுடனான நடவடிக்கைகள் பற்றி முழு அளவில் இந்திய மத்திய அரசு விசாரணை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்த வங்கிக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே தொடர்புகள் இருந்தது என்பதை இந்தியநிதியமைச்சர் மன்மோகன் சிங் மக்களவையில் நிராகரித்திருந்தார் என்பதும், உலகெங்கிலுமுள்ள இவ் வங்கிக்கிளைகள் நிதிமோசடி காரணமாக மூடப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**ஸ்லேவேனியா**

## சுதந்திரப் பிரகடனத்தைப் ஜோர்ஜியா அங்கீகரித்தது

சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து சென்றுள்ளதாக அறிவித்த ஜோர்ஜியா குடியரசு ஸ்லேவேனியா சுதந்திரப் பிரகடனத்தை அங்கீகரித்துள்ளது.

யூகோஸ்சிலாவியாவில் இருந்து சென்றுள்ள ஸ்லேவேனிய குடியரசை அங்கீகரிப்பதாகவும் அந்நாட்டுடன் ராஜீய தொடர்புகளை வைத்திருக்க தாம் விரும்புவதாகவும் ஜோர்ஜியா குடியரசின் அதிகாரி ஒருவர்தெரிவித்துள்ளார்

ஆனால் சோவியத் வெளியுறவு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் இது பற்றித் தெரிவிக்கும் போது ''ஜோர்ஜியா லித்வேனியா குடியரசுகள் வெளிநாடு ஒன்றுடன் சட்டபூர்வமாக ராஜீய உறவுகளை வைத்திருக்க முடியாது'' என்று தெரிவித்தார்.

**முடமாகிய**

சிறிலங்காஇராணுவச்சிப்பாய்களுக்குப் பயன் பொருத்தமானதொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தித்தர அரசாங்கமும் தனியார் நிறுவனங்களும் முன்வரவேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

**5 சிங்களவர் கொலை**

அம்பாறை மாவட்டத்தின் கிழக்குப்பகுதியில் நேற்று முன்தினம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து சிங்களவர்கள் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

**வளைகுடாப்**

மேலும் அவர் ஆனையிறவு முகாம் ஒரு கட்டத்தில் புலிகளிடம் வீழ்ந்துவிடும் நிலைக்கே வந்துவிட்டதாக தாம் கருதியதாகத் தெரிவித்தார்.

ஜூலை 10ஆம் திகதி அதிகாலை விடுதலைப் புலிகள் முகாமைத் தாக்கத் தொடங்கினர். முன்னணி பங்கர் ஒன்றிலிருந்து அதுபற்றிய முதலாவது சமிக்ஞை வந்தது. புலிகளின் தாக்குதலை எதிர்பார்ப்பதற்கான குறி சொல் ''வல்மல......... வல்மல'' (ஒரு மலரின் பெயர், என்று வானொலி மூலம் ஒரு அதிகாரி சத்தமிட்டார்

முகாமின் முன்னணி பங்கர் ஒன்றிலிருந்து வானொலி மூலம்பேசிய மேஜர் புத்ததாச குண்டு ஒன்றினால் தாக்கப்பட்டு படுகாயமுற்றார். அங்கே இருந்த இன்னொரு அதிகாரி கொல்லப்பட்டார்.

**ஹெலி தப்பியது புதுமையே!**

இதனைத் தொடர்ந்து அருகில் உள்ள இராணுவத் தளத்திலிருந்து ஹெலி கொப்டர் உதவி கோரினேன். ஆனால் ஹெலிகொப்டர் ஒன்று முகாமை நெருங்கிவந்தபோது புலிகள் மறைத்து வைத்திருந்த கனரக இயந்திரத் துப்பாக்கியினால் சுடத் தொடங்கினர். இதில் ஹெலிகொப்டர் தாக்கப்படாதது புதுமையான தொன்றாகும்.

**புத்ததாச இறந்தார்**

ஹெலிகொப்டர் தரையிறங்குவதற்கு மூன்று முறை முயன்றும் இறக்கமுடியாது போய்விட்டது. இதனால் சில மணிநேரத்தில் மேஜர் புத்ததாச உயிரிழந்தார்.

**காலை வெட்டினேன்**

சண்டையின் போது காயமடைந்த இரு இராணுவத்தினர்களுக்கு அருகில் இருந்த இராணுவ முகாம் ஒன்றில் இருக்கும் மருத்துவர் ஒருவரின் வானொலி மூலமான ஆலோசனையின்படி கால்களை வெட்டி அகற்றினேன் என்றும் அவர் ராய்ட்டருக்கு அளித்த பேட்டியின்போது குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.